

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் நகர துணைச் செயலாளர் ராஜேஸ்வரி கைலாசம் இல்ல திருமண விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிலையில் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மணமக்களை நேரில் சென்று வாழ்த்தினர். உடன் திருவள்ளூர் நகரக் கழகச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் உள்ளனர்





ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட மூவரசம்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் புனித தோமையார்மலை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, ஒன்றிய குழுத் துணைத் தலைவர் பி.பிரசாத், ஜி.கே. வி.அன்பு பிரபாகரன் அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.

### தமிழக வெற்றிக் கழக பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 40 பேர் பலி!

# மனிதநேயத்திலும், கடமையாற்றுவதிலும் நமது ‘உழைப்புத் தேனீ’யான முதலமைச்சர் எட்டாத உயரத்தில் நிற்கிறார்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, செப். 29-

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் நடிகர் விஜய் பிரச்சாரக் கூட்டத்தால் ஏற்பட்ட மக்கள் நெரிசலில் 40 பேர் உயிரிழப்பு! மனிதநேயத்திலும், கடமையாற்றுவதிலும் நமது ‘உழைப்புத் தேனீ’யான முதலமைச்சர் எட்டாத உயரத்தில் நிற்கிறார் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

கரூரில் நேற்று (27.9.2025) நடைபெற்ற த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சாரக் கூட்டத்தால் ஏற்பட்ட நெரிசலில் குழந்தைகள் உள்பட 40 பேர் பரிதாபமான முறையில் மரணம் அடைந்தனர். கரூர் மாநகரமே சோக இருளில் மூழ்கிக் கிடக்கிறது. எங்கு பார்த்தாலும் மக்களின் அழு குரல் ஓலம் கேட்கிறது. ஓர் அரசியல் கூட்டத்தில் இப்படியொரு கொடூரம் இதுவரை எங்கும் நடந்திராத, கேள்விப்பட்டிராத அவலமாகும்.

**நடிகர் விஜய்யின் மிகவும் காலதாமதமான வருகை**

நேற்று (27.9.2025) காலை 8.45 மணிக்கு நாமக்கல்லில் இருந்து பிரச்சாரம் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நடிகர் விஜய் சென்னையிலிருந்து புறப்பட்டதே காலை 8.30 மணிக்குத்தான். இதனால் விஜய் வந்து சேர்ந்து பிரச்சாரத்தைத் தொடங்கியதோ 6 மணி நேரம் தாமதமாக - பிற்பகல் 2.30 மணிக்குத்தான்.

அதே போல் கரூர் வேலுசாமிபுரத்தில் காலை 10.30 மணிக்குப் பிரச்சாரம் செய்யக் காவல்துறையிடம் அனுமதி பெறப்பட்டு இருந்தது. ஆனால் இரவு ஏழே கால் மணிக்குத்தான் பிரச்சாரத்துக்கு வந்து சேர்ந்தார் த.வெ.க. தலைவர் நடிகர் விஜய்.

**எந்தக் கட்டுப்பாட்டையும் பின்பற்றவில்லை!**

பல மணி நேரம் மக்கள் காத்துக் கிடக்க வேண்டிய நிலை பொது மக்களுக்கு ஏற்பட்டது. குடிக்க தண்ணீர், உணவு ஏதுமின்றி மக்கள் பெரும் களைப்புக்கு ஆளாகும் நிலை ஏற்பட்டது.

விஜய் பேச ஆரம்பிக்கும்போதே ஒலிப் பெருக்கி வேலை செய்யவில்லை. அவர் பிரச்சாரம் செய்த பேருந்தை நோக்கி மக்கள் முண்டியடித்துக் கொண்டு சென்றனர். இதனால் பெரும் நெரிசல் ஏற்பட்டது. அவர் பேசிக் கொண்டிருந்தபோதே பலர் மயக்கம் போட்டு விழுந்தனர்.

நீதிமன்றம், காவல்துறை விதித்திருந்த எந்தக் கட்டுப்பாடும் பின்பற்றப்படவில்லை; மரங்களின் மீதும், சுவர்கள், மதில், கம்பங்கள், மின் கம்பங்கள் என்று பலவாறு ஏறி நின்றனர். மேலும் அதிகமானவர்கள் ஏறியதால் மரக்கிளை முறிந்து கீழே விழுந்ததிலும் பலரும் காயப்பட்டனர்.

**நமது முதலமைச்சரின் மின்னல் வேக செயல்பாடுகள்!**

கூட்டத்திற்குள் ஆம்புலன்ஸ்கூட நுழைய முடியவில்லை. விஜய் பேசி விட்டுச் சென்ற பின்னரே பாதிக்கப்பட்ட பகுதிக்குச் செல்ல முடிந்தது - மீட்புப் பணிகளில் ஈடுபட முடிந்தது.

உடனடியாக கரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் மீட்கப்பட்டவர்கள் கொண்டு செல்லப்பட்டனர்.

கூட்ட நெரிசலால் 8 குழந்தைகள் 16 பெண்கள் உட்பட 40 பேர் பரிதாபமாக மரணம் அடைந்த கொடூரம் நடந்தது.

இந்தக் கொடூரச் செய்தியை அறிந்ததும், நமது முதலமைச்சரின் மின்னல் வேக செயல்பாடுகள்.

1. தலைமைச் செயலாளர் - தலைமைச் செயலக அதிகாரிகளுடன் முதலமைச்சர் ஆலோசனை.

2. காவல்துறை அதிகாரிகளுக்கு அறிவுரை, ஆணை.

3. கூட்ட நெரிசலில் சிக்கி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை உடனடியாக நேரில் சென்று பார்க்குமாறு கரூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் செந்தில்பாலாஜியை அனுப்பி வைத்தார்.

4. அமைச்சர்களை அழைத்து, விரைந்து கரூருக்குச் செல்ல பணித்தமை.

5. உடனுக்குடன் கள நிலவரம் அறிந்து, அதற்கேற்றவாறு அரசுப் பணிகளை முடுக்கிவிட்டார்.

6. உள்ளூர், பக்கத்து மாவட்டத்தில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் எல்லோரையும் கரூருக்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றும் பணியில் இறங்குமாறு ஆணை.

7. நெரிசலில் சிக்கி, காயமடைந்தோர் தனியார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றால், அந்த சிகிச்சை செலவையும் அரசே ஏற்கும் என்றார் முதலமைச்சர்.

8. உயிரிழந்தோர் குடும்பத்திற்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.10 லட்சம், காயமடைந்தவர்களுக்கு ரூபாய் ஒரு லட்சம் நிவாரணம் அளிக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு.

9 ஒரு நபர் விசாரணை ஆணையத்திற்காக ஓய்வு பெற்ற நீதிபதி ஜஸ்டிஸ் திருமதி அருணாஜெகதீசன் அவர்களை நியமித்து, விரைந்து அறிக்கை தர ஏற்பாடு.

**நடுநிசியில் கரூர் புறப்பட்டார் முதலமைச்சர்**

10. இவ்வளவும் செய்து முடித்து, நடுநிசி என்றும் பார்க்காமல், இரவே தனி விமானம்மூலம் திருச்சி சென்று, பிறகு அங்கிருந்து கரூருக்கு இரவு 2 மணியளவில் சென்று, மறைந்தவர்களின் உடலுக்கு மருத்துவமனையில் மரியாதை செய்து, சிகிச்சை பெறும் மருத்துவப் பயனாளிகள் ஒவ்வொருவரையும் நேரில் பார்த்து, நலம் விசாரித்து, ஆறுதல், தைரியம் கூறிவிட்டு, மருத்துவமனையில் உள்ள மருத்துவக் குழுவினருடன் கலந்து பேசி, மேலும் தீவிரமாகச் சிகிச்சைகளை மேற்கொண்டு உயிர்களைக் காப்பாற்ற அன்புக் கட்டளையிட்டு, மருத்துவர்களின் கடமையுணர்வுக்காக அவர்களையும் ஊக்கப்படுத்தினார்.

பிறகு செய்தியாளர்களை இரவு 3.15 மணிக்குச் சந்தித்து, தனது தாங்கொணா வேதனை, துயரம்பற்றியெல்லாம் பகிர்ந்துகொண்டு, சென்னை திரும்பினார்!

இவ்வளவுக்கும் இரவு 8 மணிக்கு இந்த செயல்பாடு தொடங்கி, பொழுது விடியும் முன்பாகவே நடந்து முடிந்துவிட்டது.

மூத்த அமைச்சர்கள் குழு, முதலமைச்சருடன் இருந்து கண்காணித்து, மருத்துவச் சிகிச்சைகள் வேகமாக நடந்திட உந்து சக்தியானார்கள்.

மருத்துவமனையில் முகக்கவசம்கூட அணியாது சென்று, பாதிக்கப்பட்டு மருத்துவப் படுக்கையில் உள்ளோரிடம் பேசியது, எவர் மனதையும் உருகவே செய்யும்.

சோகமே உருவாகிய முகத்துடன் அவர் நடமாடிய காட்சி, அவருக்குள்ள எதையும் தாங்கும் இயக்கத்தின் அப்பழுக்கற்ற மனிதநேயத்தையும் பறைசாற்றுபவனாகவே இருந்தன!

**செய்தியாளர்களின் சந்திப்பில் முதலமைச்சர் காட்டிய நாகரிகம்!**

எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தது, செய்தியாளர்கள் சந்திப்பு. இதை அரசியல் நோக்குடன், குறுக்கிடக் கூடாது என்று அறிவுரை கூறி, பொதுவானவர்கள் மத்தியில், ஏன் அவரது அரசியல் எதிரிகளிடம்கூட (மறைமுக) வியப்பு கலந்த பாராட்டையும், நனி நாகரிகத்தையும் எடுத்துக்காட்டும் நிலைக்கு உயர்ந்துள்ளார்.

தந்தை பெரியாருக்கு மிகவும் பிடித்த குறள்,

“குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானங் கருதக் கெடும்.”

பொதுத் தொண்டுக்குக் கால நேரம் பார்க்கக் கூடாது; அதுபோல், மான அவமானமும் பார்க்காமல் பணி செய்யவேண்டும் என்பதுதான் அந்தக் குறளின் பொருள்.

அந்தக் ‘குறளின் செயலியாகவே’ நமது ‘திராவிட மாடலின்’ முதலமைச்சர், ஓய்வில்லாமல், இரவெலாம் விழித்து, தனது கடமையாற்றி, ஆளுமைத் திறனாலும், மனிதாபிமான, விருப்பு வெறுப்பற்ற வினையாலும், உலகத்தார் வியக்கும் வகையில் வேகம் கலந்த விவேகத்துடன் செயல்பட்டார்.

**கோணல் புத்தியாளர்களே, சிந்திப்பீர்!**

‘திராவிட மாடல்’ ஆட்சி எப்படிப்பட்டது - அதன் நாயகரின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எப்படிப்பட்டது என்பதை உணர்த்தும் வகையில், பருவம் பாராது, பணியாற்றிய பண்பாளராக, எவரும் எட்டாத, எட்ட முடியாத உயரத்திற்கு எழுந்து நிற்கிறார் நமது முதலமைச்சர் என்பது புரிகிறது.

கொள்கை எதிரிகளே, கோணல் புத்தியாளர்களே, இனியாவது அவரது ஆட்சியின் மாட்சியைப் புரிந்து கொள்ளமாட்டீர்களா?

இவ்வாறு திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 221வது நாள்!

## அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை,செப்.29-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 221 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (28.09.2025), அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 83, விநாயகர் கோயில் அருகில், சிவலிங்கபுரம் கொரட்டூர். 2) வட்டம் 83 அ, R.K லிங்க் சாலை, தாதம் குப்பம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ். பி.ராஜகோபால் எம்.சி , டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/கிழக்கு வடக்கு/ தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### இஸ்லாமிய மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வக்பு வாரியம் தொடர்பான

# தமிழ்நாடு அரசின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது - முதல்வருக்கு நன்றி!

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே.எம்.காதர் மொகிதீன் அறிக்கை!



திருச்சி, செப். 29-

வக்பு வாரியம் தொர்பான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் அறிவிப்புக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் நேற்று முன்தினம் (27.09.2029) வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது:

இஸ்லாமிய மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் மற்றும் பெற்றுத் தரும் இயக்கமாக தி.மு.க செயல்பட்டு வருகிறது என்பதற்கு வக்பு வாரியம் தொடர்பான தமிழ்நாடு அரசின் அறிவிப்பு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

முஸ்லிம் சமுதாயத்தின் நன்மைக்காக தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு அனைத்து வகைகளிலும் செயல்பட்டு வருகிறது. குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்ததுடன் தமிழ்நாடு சட்டப் பேரவையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. அரசு வழக்கு தொடர்ந்தது.

பாலஸ்தீன மக்கள் அனுபவித்து வரும் கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுத்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், காஷ்மீர் மாநில சிறப்பு அந்தஸ்து தொடர்பாகவும் தொடர்ந்து குரல் எழுப்பி வருவது தி.மு.க. அரசுதான். ஒன்றிய அரசு கொண்டு வந்த வக்பு திருத்தச் சட்டத்துக்கு எதிராக தமிழ்நாடு சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த வரிசையில் ஒன்றிய அரசு அவசர கதியில் கொண்டு வந்த ‘உமீத்’ சட்டத்தின்படி தமிழ்நாட்டில் வக்பு வாரியம் அமைக்கப் படாது என்று தமிழ்நாடு அரசு உறுதிபடத் தெரிவித்துள்ளது .

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறயுள்ளார்.



டாக்டர்கலாநிதி வீராசாமி எம்.பி. கோரிக்கையை ஏற்று கழக மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 1 கோடியே 51 லட்சங்கள் செலவில் திருவொற்றியூர் தொகுதி வார்டு 21 மணலி பாடசாலை தெருவில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள், கட்டும் பணிக்கு வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. அடிக்கல் நாட்டினார். நிகழ்வில் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் ஏ.வி.ஆறுமுகம், வ.முத்துசாமி, எம்.எஸ்.நாகலிங்கம், முத்துசாமி, கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஒன்றியம் போந்தவாக்கம் ஊராட்சிப் பகுதியிலிருந்து த.வெ.க. கட்சியினர் 50 மேற்பட்டோர் ஆர்.மாதவன் ஏற்பாட்டில் வல்லூரில் உள்ள திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ் முன்னிலை திமுகவில் இணைந்தார்கள். இதில் ஒன்றிய செயலாளர்கள் ஆ.சத்தியவேலு, ஆ.ராஜா, கி.வே.ஆனந்த் குமார், ரவிக்குமார் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்